# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001
தொலை பேசி : **044-25358718, 9444058718, 9677048718**
மின்அஞ்சல் : **ubeutn@gmail.com** இணையதளம்: www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:129:2016 12.04.2016

அன்பார்ந்த தோழர்களே !

## மே 25, 2016
## அகில இந்திய பொது வேலைநிறுத்தம்

- **வங்கிச் சேவையை மக்களின் அடிப்படை உரிமையாக்கிட வேண்டும் !**
- **பொதுத்துறை வங்கிகளை பலப்படுத்திட வேண்டும் !**
- **பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்குவதைக் கைவிடவேண்டும் !**
- **பொதுத்துறை வங்கிகளுக்கு தேவையான மூலதனத்தை வழங்கவேண்டும் !**
- **வாராக்கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் !**
- **வசதியிருந்தும் கடன்களை கட்ட மறுப்போர்மீது கிரிமினல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் !**
- **விஜய் மல்லையா அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறித்து விசாரணை செய்ய பாராளுமன்றக்குழுவை அமைத்திட வேண்டும் !**
- **வாராக்கடன்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் !**

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வரும் மே 25, 2016 அன்று ஒரு நாள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசிய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வங்கித்துறை சீர்திருத்தங்கள் குறித்து விரிவாக பேசியுள்ளார். மத்திய அரசின் நோக்கம் பொதுத்துறை வங்கிகளை இணைத்து 6 அல்லது 7 பெரிய வங்கிகளாக மாற்றுவது மட்டுமே. இந்தியாவில் பொதுத்துறை வங்கிகள் இணைப்பு என்பது நியூ பாங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைக்கப்பட்டது மட்டுமே. அந்த இணைப்பின் பின் விளைவுகளும், ஊழியர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் அனைவரும் அறிந்ததே. தற்போது, 3 அல்லது 4 வங்கிகள் இணைப்பு என்று அரசு செய்யும் முயற்சி வெற்றிபெறுமா என்பதும் கேள்விக்குறியே.

இன்றைய காலகட்டத்தின் தேவை அதிக எண்ணிக்கையிலான கிராமிய, நகர்புற வங்கிக் கிளைகள் திறக்கப்படவேண்டும் என்ற நிலையில், இணைப்பு என்ற

பெயரில் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்படும் அபாயமும் உள்ளது.

இந்திரதனுஷ் என்ற பெயரில் பொதுத்துறை வங்கிகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் தனியார்மயத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு அரசு செயல்படுவதாகவே தோன்றுகிறது.

விஜய் மல்லையா போன்ற பெரும் முதலாளிகள் பொதுத்துறை வங்கிகளில் கடன் பெற்று, வசதி இருந்தும் திரும்பச் செலுத்தாமல் இருக்கும் நிலையில், அவர்கள் மீது கடுமையான கிரிமினல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அரசு, அவர் வெளிநாடு செல்ல அனுமதித்துள்ளது மிகத் தவறான முன்னுதாரணமாகும்.

புதிய வங்கிகள் துவங்க அனுமதி வழங்கியதன் மூலம், பொதுத்துறை வங்கிகளின் வியாபாரம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. தனியார் வங்கிகளினால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்யும் நோக்கிலேயே, 1969ஆம் ஆண்டு பல வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டன. தற்போதுள்ள அரசு, பொதுத்துறையை சீரழிக்கும் நோக்கிலேயே, புதிய தனியார் வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளதாகத் தோன்றுகிறது.

பணி நிரந்தரம் செய்யப்படாத ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் அவசியம் கலந்துகொண்டு இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம். நமது தோழர்கள் அனைவரும், வழக்கம்போல, உணர்வுப்பூர்வமாக வரும் **மே 25, 2016 வேலைநிறுத்தத்திலும்**, அது தொடர்பாக நடைபெறவுள்ள பேரணிகள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டு, யூனியன் வங்கியில் இந்த வேலைநிறுத்தத்தை முழுமையாக வெற்றிபெறச்செய்திட வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

| | |
|---|---|
| **15-04-2016** | **All India Day – Badge wearing** |
| **25-04-2016** | **General Council meeting in Delhi** |
| **26-04-2016** | **Dharna by General Council members before Parliament** |
| **11-05-2016** | **State Level Morcha/ Rallies/ Dharna and submission of Memorandum to Governor/Chief Minister** |
| **25-05-2016** | **All India Strike** |